2

# இயேசுவைப் பற்றி நாம் எப்படி அறிவோம்? [1]

*நாம் இயேசுவைப் பற்றி வரலாற்று ரீதியான கேள்விகளை கேட்க விரும்பினால், என்ன ஆதார மூலங்கள் இருக்கின்றன மற்றும் அவைகள் எப்படிப்பட்ட தகவல்களை கொடுக்கின்றன என்பதை கண்டுபிடிக்க வேண்டும். பெரும்பாலும், இந்த ஆதார மூலங்கள் இயேசுவைப் பற்றிக் குறிப்பிடுகிற பழங்கால எழுத்துக்களாக உள்ளன. பாரபட்சமின்மையின் ஆர்வம் காரணமாக, நாம் கிறிஸ்தவம் அல்லாத ஆதாரமூலங்களோடு துவங்குவோம்.*

*அநேக பழங்கால, கிறிஸ்தவம் அல்லாத ஆதார மூலங்கள் இயேசுவைப் பற்றி கூறுவதில்லை. இயேசுவானவர் இன்று பரவலாக அறியப்பட்டிருக்கிறபடியால், இது நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். அவருடைய காலத்திலும், அவருக்குப்பின் சமீப காலத்தில் வாழ்ந்த எழுத்தாளர்களும் எப்படி அவரை கவனிக்கக் கூடாமலிருந்தார்கள்? அதற்கான பதில் இயேசு பிரபலமில்லாதவராக வாழ்ந்து, மரித்தார் என்பது பதிலாக இருக்கிறது, ஆகவே அவர் அவருடைய பெரும்பாலான சமகாலத்து மனிதர்களால் அறியப்படாதவராக இருந்தார். அவர் ரோம பேரரசின் ஒரு ஒதுங்கிய பகுதியில் ஏழை யூதக் குடும்பத்தில் பிறந்தார். நம்மால் சொல்ல முடிந்தவரை, அவர் ஒரு குழந்தையாக இருந்தபோது, ஏரோதுவின் கொலை வெறிக்கு தப்பும்படி, அவருடைய பெற்றோர் அவரை எகிப்துக்கு எடுத்துச் சென்றதை தவிர, அவருடைய சிறிய கிராமத்தை விட்டு அவர் ஒருபோதும் வெளியில் பயணம் செய்ததாக தெரியவில்லை (மத்தேயு 2:13-15). அவருடைய மரணத்தைச் சுற்றி நடந்த சம்பவங்கள் யூதர் மத்தியில் நடந்த ஒரு வீண் சண்டையின் விளைவாக இருந்தது என அதை அறிந்தவர்களால் கருதப்பட்டது, அந்த சமகாலத்தில் வாழ்ந்த யூதர் அல்லாதவர்களால் அவர்கள் அற்பமாய் பார்க்கப்பட்டார்கள். ஆகவே, பெரும்பாலான பண்டைய எழுத்தாளர்கள் அவரை கவனிக்காமல் விட்டு விட்டார்கள் என்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. அவர்களில் யாராவது அவரை கவனித்திருந்தால் அது ஆச்சரியமானதாக இருக்கும்!*

*இருப்பினும், ஒரு சிலர் அவரை கவனித்தார்கள். இவர்கள் இரு வகைப்படுகிறார்கள்: அஞ்ஞான எழுத்தாளர்கள் (அதாவது கிறிஸ்தவராகவும் அல்லது யூதராகவும் இல்லாதவர்) மற்றும் யூத எழுத்தாளர்கள்.*

## இயேசுவானவரைப் பற்றிய அஞ்ஞானிகளின் எழுத்து மூலங்கள்

*டேசிடஸ் என்பவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் துவக்க காலத்தில் ரோம வரலாற்று எழுத்தாளராக இருந்தவர். அவர் 115 ஆண்டு வாக்கில், கி.பி. 64 இல் ரோமாபுரியில் நிகழ்ந்ததும் மற்றும் நீரோ மன்னன் தாமே அதை*

*செய்ய உத்தரவிட்டார் என்று வதந்தியாக சொல்லப்பட்டதுமான ஒரு பெரிய தீ விபத்தை பற்றி பின்வருமாறு எழுதினார்:*

> *ஆனால் எல்லா மனித முயற்சிகள், பேரரசரின் எல்லா ஊதாரித்தனமான வெகுமதிகள் மற்றும் கடவுள்களின் சாந்தப்படுத்துதல்கள் ஆகியவை பெருந்தீ ஒரு கட்டளையின் விளைவாக உருவானது என்ற கெட்ட நம்பிக்கையை அழிக்கவில்லை. இதின் விளைவாக, இந்த அறிக்கையிலிருந்து விடுபட, நீரோ குற்றத்தை பொது ஜனங்களால் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்ட, தங்கள் அருவருப்புகளினிமித்தம் [flagitia], படைக்கப்பட்ட, ஒரு கூட்ட மக்கள்மேல் சுமத்தி, அவர்கள்மேல் கடுமையான சித்தரவதைகளை உண்டாக்கினான். இந்த பெயரின் மூலமாக விளங்கிய கிரைஸ்டல் என்பவர் தியேரியராயன் ஆட்சி காலத்தில், எங்கள் ஆளுனராகிய பொந்தியு பிலாத்துவின் கையில் மிக கடுமையான தண்டனையை அனுபவித்தார், மற்றும் சிறுபிள்ளைதனமான ஒரு மூட நம்பிக்கை தற்காலிகமாக கட்டுப்படுத்தப்பட்டது. மறுபடியுமாக, அது யூதேயாவில் மட்டுமல்ல, அந்த தீமையின் முதல் ஆதாரமூலம், ரோமாபுரியிலும் வெடித்து பரவியது, அங்கே உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்து வந்ததான கொடூரமானவைகள் மற்றும் வெட்கக்கேடானவைகள் மையங்கொண்டிருந்து, பிரபலமாக மாறின, அதின்படி குற்றத்தை ஒப்புக்கொண்ட எல்லாரும் முதலாவதாக சிறையிடுக்கப்பட்டனர் ...[1]*

*டேசிடஸ் என்பவர் கிறிஸ்துவத்தின் அனுதாபி அல்ல, ஆகவே அவர் இயேசு அல்லது அவருடைய பின்பற்றாளர்கள் ஆகியோருக்கு எதிராக பாரபட்சமாக நடந்து கொண்டதற்காக அவரை குற்றப்படுத்த முடியாது. இருப்பினும், அவனுடைய அறிக்கைகள் புதிய ஏற்பாட்டில் இயேசுவை குறித்து கொடுக்கப்பட்டுள்ள சில தகவல்களை உறுதிப்படுத்துகின்றன: அவர் "கிரைஸ்டஸ்" ("கிறிஸ்து" என்பதற்கான லத்தீன்) என அழைக்கப்பட்டார். "மேலும் திபேரியுராயன் ஆட்சிகாலத்தில்" அவர் கொல்லப்பட்டார் (காணவும் லூக்கா 3:1), மற்றும் அவருக்கு தண்டனை வழங்கியவராக புதிய ஏற்பாடு கூறுகிறபடி, அப்போதைய யூதேயா ஆளுனராகிய, "பொந்தியு பிலாத்துவாக" இருந்தான்.*

*சுயுடோனியஸ் என்பவர் முதல் நூற்றாண்டின் கடைசியிலும், இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் வாழ்ந்த ரோம வரலாற்று ஆசிரியராக இருந்தார். அவர் இயேசுவை குறித்து அதிகமாக கூறவில்லை, ஆனால் கி.பி. 49ல் கிலவுதியராயன் பிறப்பித்த ஒரு சட்டம் தொடர்பான குறிப்பில் அவரைக்குறிப்பிட்டுள்ளார்: "யூதர்கள் கிரைஸ்டஸ் என்பவரின் தூண்டுதலால் தொடர்ந்து தொல்லைகளை ஏற்படுத்தினதால் [கிலவுதியராயன்] ரோமா புரியிலிருந்து அவர்களை வெளியே துரத்திவிட்டான்."[2] "கிரஸ்டோஸ்" (Chrestus) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்த "கிரஸ்டஸ்" (chrestos) என்ற பெயர் "அன்பு, நேசம்" என பொருள் படக்கூடியதாயிருக்கிறது, சுயுடோனியஸ் என்பவர் இயேசுவின் பட்டப்பெயராகிய "கிறிஸ்து" (Christos-எபிரெய வார்த்தையாகிய mashiach என்பதற்கு இணையாகவுள்ளது, அதின் பொருள் "அபிஷேகம் பண்ணப்பட்டவர், மேசியா" என்பதாகும்) என்பதைத்தான்*

இப்படி தவறாக புரிந்து கொண்டதாக தெரிகிறது. நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை, ஆனால் சுயுடோனியஸ் என்பவர் ரோம யூதர்கள் மற்றும் யூத கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு இடையிலான மோதலை குறிப்பிடுவதாகவும், இது "கிறிஸ்டஸ்" என்பவரால் தூண்டிவிடப்பட்டதாக அவர் தவறாகப் புரிந்து கொண்டதாக தெரிகிறது. ரோமர்கள் யூத குழுக்களுக்கு இடையிலான வீண் சண்டைகளை அற்பமாக எண்ணினார்கள்; மற்றும் என்ன நடந்தது என்பதை அவர்கள் கண்டுபிடிக்க முயற்சித்த போது கூட, பெரும்பாலான நேரங்களில் அவர்கள் அவைகளை தவறாக புரிந்து கொண்டார்கள் (காணவும் நடபடிகள் 23:26-30; 25:13-22). சுயுடோனியஸ் அதிகமாக கூறாவிட்டாலும், இயேசுவை பற்றிய ஒரு விழிப்புணர்வை வெளிப்படுத்தினார், அவர் உண்மையில் யாராக இருந்தார் என்ற தெளிவான கருத்து உடையவராக இல்லாத நிலையிலும் அவர் இதை செய்தார்.

இன்னொரு அஞ்ஞான மூலம் அதிக ஆர்வமுள்ளதாயிருக்கிறது. கி.பி. 112 இல் பித்தினியா பிராந்தியத்தின் ரோம ஆளுனரான பிளினி என்பவர் கிறிஸ்தவர்கள் என்று குற்றம்சாட்டப்பட்ட மக்களை தான் எவ்விதம் நடத்தவேண்டும் என்று கேட்டு பேரரசர் டிராஜன் என்பவருக்கு ஒரு கடிதம் எழுதினார். (வரலாற்றின் இந்த காலகட்டத்தில், கிறிஸ்தவர்கள் பேரரசரின் சிலைக்கு பலியிட மறுத்துவந்ததால், கிறிஸ்தவம் ஒரு சட்ட விரோதமான மதமாக இருந்தது.) அவர் கோபத்தோடு அவர்களை விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமா அல்லது முறையாக குற்றப்படுத்தப்பட்டு, அவர் முன் கொண்டுவரப்பட்டால் மட்டும் அவர்களை விசாரிக்க வேண்டுமா? பிளினி, இரண்டாவது முறையை கையாளும்படி டிராஜன் எழுதிய பதிலை நாம் உடையவர்களாயிருக்கிறோம். பிளினியின் நீண்ட கடிதத்தின் ஒரு சிறு பகுதி நமக்கு குறிப்பாக ஆர்வத்தை உண்டாக்கக் கூடியதாயிருக்கிறது. கிறிஸ்தவ ஆராதனை கூட்டங்களைப் பற்றி அவர் விளக்கும் போது,

> ... அவர்கள் முன் தீர்மானிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட நாளில் வெளிச்சத்திற்கு முன்பாக கூடிவரும் பழக்கத்தை உடையவர்களாயிருந்தார்கள், அவர்கள் ஒரு தேவனுக்கு பாடுவதுபோல் கிறிஸ்துவுக்கு ஒரு பாடலை மாறிமாறி பாடினபின்பு, ஒரு உறுதிமொழியால் தங்களை பிணைத்துக்கொண்டார்கள், எந்த பொல்லாத கிரியைகளை செய்யாதிருக்கும்படியாக, ஒருபோதும் எந்த மோசடியும் செய்யாதிருக்கும்படியாக, திருடுதல் அல்லது விபச்சாரம் தவறாயிருந்திக்கும்படியாக தங்கள் வார்த்தையில் ஒருபோதும் செய்யா திருக்கும்படியாக, ஒரு பொருப்பு ஒப்புக்கொடுக்கப்படும்போது அதை ஒரு போதும் மறுதலியாமலிருக்க உறுதிமொழி எடுத்துக்கொண்ட பிறகு கலைந்து போவது அவர்கள் பழக்கமாயிருந்தது, மறுபடியும் உணவில் பங்கு பெற அவர்கள் திரும்பவும் கூடிவந்தார்கள். அந்த உணவு சாதாரணமான மற்றும் குற்றமற்ற வகையை சேர்ந்ததாயிருந்தது. இருந்தாலும், எனது உத்தரவு வெளியிடப்பட்ட பிறகு இந்த பழக்கத்தையும் அவர்கள் விட்டுவிட்டார்கள், அதினால் உங்கள் உத்தரவுபடி அரசியல் மன்றங்களை நான் தடைசெய்துவிட்டேன்.[3]

பிளினி "கிறிஸ்துவை" பெயர் சொல்லி குறிப்பிட்டுள்ளார் மற்றும்

கிறிஸ்தவர்கள் அவரை இந்த துவக்க காலத்திலேயே "ஒரு தேவனாக" ஆராதித்ததாக அவர் புரிந்து கொண்டிருந்தார். இது சிலர் வாதிடுவது போல, இயேசுவின் தெய்வீகத்தன்மை பற்றிய விசுவாசம் பிற்காலத்தில் உண்டானதல்ல என்பதை சுட்டிக்காட்டுகிறது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்கான தங்கள் அர்ப்பணிப்பின் வாழ்வு மிக உயர்ந்த ஒழுக்கநெறியின் வாழ்க்கையை தங்கள் மேல் பிணைத்திருந்தது என்பதை கண்டார்கள். பிளினி "கிறிஸ்துவை" பற்றி குறிப்பிடுவது இந்த ஒரு முறை மட்டுமல்ல; தனது கடிதத்தின் பிற பகுதியில், குற்றப்படுத்தப்பட்டபோது, தண்டனையிலிருந்து தப்பிக்கொள்வதற்காக சில மக்கள் "கிறிஸ்துவை சபித்தார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

செல்சஸ் மற்றும் சமோஸ்டாவின் லூசியன் ஆகிய இருவரும் இயேசுவைப் பற்றி எழுதிய இரண்டு முக்கியமில்லாத அஞ்ஞான எழுத்தாளர்கள் ஆவர். அவர்கள் இருவருமே கிறிஸ்துவுக்கோ அல்லது கிறிஸ்தவத்திற்கோ அதிக மரியாதை கொடுக்காதவர்களாயிருந்தார்கள். செல்சஸ் என்பவரின் "உண்மையான சொற்பொழிவு" *True Discourse* (கி.பி. 177-78) என்ற நூல், மூன்றாம் நூற்றாண்டின் கிறிஸ்தவ எழுத்தாளர் ஓரிஜன் என்பவருடைய நூலின் மேற்கோள்களிலிருந்து நமக்கு தெரியவருகிறது. ஓரிஜன் என்பவரின் கூற்றுப்படி, செல்சஸ் என்பவர் ஒரு யூதனுக்கும் இயேசுவுக்கும் இடையிலான ஒரு உரையாடலை கண்டுபிடித்தார், அதில் அந்த யூதன் இயேசுவானவர் கன்னிகைக்கு பிறந்தவர் அல்ல (மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்கள் உரிமை கோருகிறபடி) ஆனால், மரியாள் நெறிதவறிய நிலையில் "பன்த்தீரா" என்ற போர் வீரனால் தாய்மை அடைந்தாள் என உரிமை கோரியுள்ளான். இந்த பெயர் "கன்னிகை" "virgin" (*parthenos*) என்பதற்கான கிரேக்க வார்த்தையின் ஒரு விளையாட்டாக இருக்கிறது. இயேசுவானவர் எகிப்தில் மந்திரங்களை கற்றதாகவும், பின் பாலஸ்தீனத்திற்கு திரும்பி வந்து தன்னை ஒரு கடவுளாக அறிவித்துக் கொண்டதாகவும் செல்சஸ் உரிமை கோருகிறார்.

கி.பி. 115-200 வாக்கில் வாழ்ந்த லூசியன் என்பவர், கிறிஸ்தவர்கள் இயேசுவை ஒரு தேவனாக கனப்படுத்தியதாக கூறினார் மற்றும் "உலகத்தில் ஒரு புதிய மதகொள்கையை அறிமுகப்படுத்தியதால் பாலஸ்தீனத்தில் சிலுவையில் அறையப்பட்ட ஒரு மனிதர்" என்ற ஒரு குழப்பமான கருத்தையும் தெரிவித்தார்.[4] அந்த சிலுவையில் அறையப்பட்டவர் இயேசுதான் என்பதை லூசியன் சிந்தித்தாரா இல்லையா என்பது தெளிவாக தெரியவில்லை. செல்சஸ் அல்லது லூசியன் ஆகிய இருவரும் கிறிஸ்தவத்தை குறித்தோ அல்லது கிறிஸ்துவை குறித்தோ அக்கறை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாக உள்ள நிலையில் இயேசுவானவர் வாழ்ந்தார் என்றும் அவர் கன்னியின் மைந்தனாக பிறந்தார் என விசுவாசிக்கப்பட்டார் என்றும் மற்றும் அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்தார் என்பதற்கு அவர்களுடைய எழுத்துக்கள் சாட்சி கூறுகின்றன.

## இயேசுவானவரைப் பற்றிய யூதருடைய எழுத்து மூலங்கள்

எவ்விதத்திலும் மிகவும் முக்கியமான பண்டைய யூத எழுத்தாளர் ஜோசிபஸ் என்பவர் ஆவார். இவர் கி.பி. முதல் நூற்றாண்டின் கடைசி பகுதியை சேர்ந்த ஒரு வரலாற்று ஆசிரியர். ஜோசிபஸ் யூத வரலாற்றைப் பற்றி விரிவான குறிப்புகளை

எழுதினார். புதிய ஏற்பாட்டுடன், இயேசுவின் நாட்களின் யூத மதத்தை பற்றி அறிந்து கொள்வதற்கு, இது நமது பிரதான தகவல் மூலமாக இருக்கிறது. இவருடைய இருபது தொகுப்புகளை கொண்ட *"யூதர்களின் - பண்டை காலங்கள்"* என்ற புத்தகம் கி.பி. 93-94 இல் வெளியிடப்பட்டது, இதில் அவர் பிரதான ஆசாரியர் அனனுஸ் (அல்லது அன்னா) பற்றி கூறியுள்ளதாவது:

> ஆகவே அவர் சனகரீப் நீதிபதிகளை வரவழைத்து மற்றும், கிறிஸ்து என்று அழைக்கப்பட்ட இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு மற்றும் வேறு சிலரையும் அவர்கள் முன்பாக கொண்டு வந்தான். அவன் அவர்களை பிரமாணத்தை மீறியதாக குற்றப்படுத்தி மற்றும் கல்லெறிந்து கொல் லப்படும்படியாக ஒப்புக்கொடுத்தான்.[5]

ஜோஸிபஸ் இயேசுவுக்கு வழங்கப்பட்ட பெயரையும் மற்றும் அவர் "கிறிஸ்து" ("மேசியா") என்று அழைக்கப்பட்டார் என்பதையும் அறிந்திருந்தார் என்பதை கவனியுங்கள். அவர் மேலும் புதிய ஏற்பாட்டு தகவலாகிய, இயேசு யாக்கோபு என்ற பெயரில் ஒரு சகோதரரை உடையவராக இருந்தார் என்பதையும் உறுதிப்படுத்தினார் (மத்தேயு 13:55; கலாத்தியர் 1:19).

இயேசுவை குறித்த இரண்டாவது குறிப்பு ஜோஸிபஸின் *பண்டைகாலங்கள்* (*Antiquities*) என்று நூலில் அதிக சர்ச்சைக்குறியதாக இருக்கிறது:

> இந்த காலகட்டத்தில் இயேசு என்னும் ஒருவர் வாழ்ந்தார். *அவர் ஒரு ஞானமுள்ளவராயிருந்தார், உண்மையில் ஒருவர் அவரை மனிதரென்றே அழைக்க வேண்டியதாயிருந்தால்.* அவர் அதிசயிக்கத்தக்க ஆச்சரியமான செயல்களை செய்யக்கூடியவராக இருந்தார். அவர் அனேக யூதர்களை மற்றும் கிரேக்கர்களை வென்றெடுத்தார். *அவர்தான் மேசியாவாக இருந்தார்.* நம் மத்தியில் உயர்ந்த நிலையிலிருந்த மக்களால் அவர் குற்றப்படுத்தப்பட்டதை பிலாத்து கேள்விப்பட்டபோது, அவர் சிலுவையில் அறையப்படும்படி ஆக்கினைக்கு உட்படுத்தினான். *மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுந்தவராக அவர்களுக்கு காணப்பட்டார், தேவனுடைய தீர்க்கதரிசிகள் இவைகளையும் மற்றும் அவரைப் பற்றி எண்ணிலடங்காத ஆச்சரியமான காரியங்களை முன்னுரைத்துள்ளனர்.* மக்கள் குழுவினரான கிறிஸ்தவர்கள், அவருடைய பெயரால் தங்களை அழைத்துக்கொண்டவர்கள், இந்த நாள் வரை மறைந்துபோகாமல் இருக்கிறார்கள்.[6]

இந்த பகுதியை சர்ச்சைக்குள்ளாக்குவது எதுவென்றால், இயேசுவானவர் மனிதனுக்கு மேலானவராக இருந்தார் மற்றும் மரித்தோரிலிருந்து எழுந்த இஸ்ரவேலின் மேசியாவாக இருந்தார் என்ற ஒளிவு மறைவில்லாத உரிமை கோருதல் ஆகும். பிரச்சனை என்னவென்றால், கிறிஸ்தவராக இல்லாதிருந்த ஜோஸிபஸ் அதை நம்பவில்லை என்பதுதான். இங்கே நாம் பெற்றிருப்பது ஜோஸிபஸின் அதிகாரப்பூர்வமான குறிப்பாக இருக்கிறது, அதில் அவர் இயேசுவை குறிப்பிட்டுள்ளார். இது ஒரு கிறிஸ்தவ ஆசிரியரால் திரும்ப எழுதப்பட்டதாக இருக்கலாம். அந்த பகுதியை மறுபடியும் வாசியுங்கள் மற்றும் கிறிஸ்தவத்தை குறித்த வெளிப்படையான பகுதிகளை விட்டுவிடுங்கள் (சாய்வு

எழுத்தில் உள்ளன) மற்றும் நீங்கள் ஜோஸிபஸ் எழுதினதின் துல்லியமான ஒரு பிரதிநிதித்துவத்தை பெற்றவர்களாக இருப்பீர்கள். இதில் முக்கியமானது என்னவென்றால், ஜோஸிபஸ் ஒரு அவிசுவாசியாக இருந்த போதிலும், இயேசுவைப்பற்றி சுவிசேஷங்களில் கூறப்பட்டுள்ள பல உண்மைகளை உறுதிப்படுத்தினார்: அவர் ஒரு போதகராக இருந்தார் (லூக்கா 18:18), அவர் யூதர்கள் மற்றும் புற ஜாதிகளிடத்திலிருந்தும் பின்பற்றாளர்களை பெற்றிருந்தார் (யோவான் 12:20, 21), அவர் யூதருடைய "ஆலோசனைப்படி" பிலாத்துவால் மரண ஆக்கினைக்கு உட்படுத்தப்பட்டார் (மத்தேயு 27:1, 2) மற்றும் அவர் சிலுவையில் அறையப்பட்டார் (மத்தேயு 27; மாற்கு 15; லூக்கா 23; யோவான் 19). மேலும் ஜோஸிபஸ், கிறிஸ்துவை பின்பற்றினவர்கள் யூத சமயத்திலிருந்து தனித்து அறியப்பட்ட குழுவாக இருந்தார்கள் மற்றும் அவர்கள் "கிறிஸ்தவர்கள்" என அறியப்பட்டிருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தினார் (நடபடிகள் 11:26; 1 பேதுரு 4:16). இது ஒரு தகவல் களஞ்சியமாக இருக்கிறது.

ஜோஸிபஸின் இயேசுவைப் பற்றிய இன்னொரு குறிப்பும் கூட ஆர்வமிக்கதாக இருக்கிறது. வரலாற்று ஆசிரியர் யோவான் ஸ்நானகனை குறித்து விரிவாக எழுதியுள்ளார், அவரை யூதர்களை நீதியாய் வாழும்படி பிரசங்கித்த ஒரு மனிதனாக, நியாயம், இரக்கம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றை பிரசுங்கித்தவராக விவரித்துள்ளார்.[7] அவர் மேலும், மக்கள் மத்தியில் இவருக்கு இருந்த செல்வாக்கினிமித்தம் ஏரோது அந்திபாஸ் இவருக்கு பயந்திருந்தார் என்றும் மற்றும் முடிவில் இவரை சிறையிலடைத்து, சிரச்சேதம் செய்தார் என்பதையும் குறிப்பிட்டுள்ளார் (காண்க மாற்கு 6:19, 20). இது புதிய ஏற்பாடு யோவானைக் குறித்தும், அவருடைய போதனைகளைக் குறித்தும் சொல் வதை துல்லியமாக பிரதிபலிக்கிறது, ஜோஸிபஸ் யோவானுக்கு இயேசுவோடு இருந்த தொடர்புகளை குறித்து குறிப்பிடாவிட்டாலும், இவைகளை குறிப்பிட்டுள்ளார்.

இயேசுவை குறித்த யூதருடைய மற்றொரு முக்கியமான எழுத்து மூலம் தால்மட் ஆக இருக்கிறது. இந்த புத்தகங்களின் தொகுப்புகள் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தை தேதியாக கொண்டுள்ளது. இருப்பினும் இதில் அடங்கியுள்ள ரபிகளின் கருத்துக்கள் மற்றும் தீர்ப்புகள் ஆகியவை ஒரு நூற்றாண்டு அல்லது அதற்கு முந்தியவைகளாக உள்ளன. எண்ணிலடங்காத குறிப்புகள் இயேசுவை ஒரு அற்புதம் செய்பவராக அங்கீகரிக்கிறது, ஆனால் சாதாரணமான உரிமைகோருதல் அவர் ஒரு மந்திரவாதியாக இருந்தார் என்பதாகும். இயேசுவானவர் வாழ்ந்தார் அல்லது அடையாள அற்புதங்களை செய்தார் என்பதையோ தால்மட் மறுப்பதில்லை, ஆனால் அதின் ஆசிரியர்கள் தேவன்தான் அவருடைய வல்லமையின் மூலமாக இருந்தார் என்பதை மறுத்தார்கள் (காண்க மாற்கு 3:22).

## இந்த எழுத்து மூலங்களை குறித்த முடிவுரைகள்

அப்படியானால் இயேசுவைப் பற்றிய இந்த அஞ்ஞான மற்றும் யூத எழுத்து மூலங்களை பற்றி நாம் என்ன முடிவுக்கு வரலாம்?

(1) அவைகள் அவர் உண்மையிலேயே வாழ்ந்தார் என்பதை உறுதி செய்கின்றன. ரோம மற்றும் யூத வரலாற்று ஆசிரியர்களின் சாட்சியங்களின் அடிப்படையில், இயேசு வரலாற்று ரீதியாக வாழ்ந்தார். எப்போதாவது, இயேசு

ஒருபோதும் வாழவில்லை அல்லது அவர் உண்மையில் வாழ்ந்தார் என்பதை வரலாற்றிலிருந்து அறிய முடியாது என்ற உரிமை கோருதலை ஒருவேளை இன்னும் நாம் கேள்விப்படக் கூடியவர்களாக இருக்கலாம். இப்படி உரிமை கோருபவர்கள், சாட்சியங்களை குறித்து அறியாதவர்களாக அல்லது அதை ஏற்க மறுப்பதில் நேர்மையற்றவர்களாக இருக்கிறார்கள்.

*(2) இந்த மூலங்கள் இயேசுவைப்பற்றி சுவிசேஷங்களில் கூறப்பட்டுள்ள பல அடிப்படை உண்மைகளை உறுதிப்படுத்துகின்றன.* அவைகள் அவர் கி.பி. முதல் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தார், யாக்கோபு என்ற பெயரைகொண்டிருந்த ஒரு சகோதரரை உடையவராக இருந்தார், யூத அதிகாரிகள் அவருக்கு மரணதண்டனை கொடுக்கப்படவேண்டுமென கேட்டுக் கொண்டனர் மற்றும் அவர் பிலாத்து ஆளுனராக இருந்தபோது ரோமர்களால் சிலுவையில் அறையப்பட்டார் என்ற உண்மைகளை உறுதிப்படுத்துகின்றன. மேலும், அவைகள் அவர் நன்கு அறியப்பட்ட ஒரு போதகராக இருந்தார். அவருடைய ஊழியம் அடையாள அற்புதங்களினால் நிறைந்திருந்தன, அவரை பின்பற்றினவர்களால் அவர் மேசியாவாக இருந்தார் என்று நம்பப்பட்டார். அவர் தெய்வமாக ஆராதிக்கப்பட்டார் மற்றும் அவரை பின்பற்றினவர்கள் ‘‘கிறிஸ்தவர்கள்’’ என்று அழைக்கப்பட்டார்கள் என்ற உண்மைகளை உறுதிப்படுத்துகின்றன. கிறிஸ்தவம் அல்லாத மூலங்கள் சுவிசேஷங்களில் முன்னதாகப் பதியப்பட்டிராத கூடுதல் தகவல்கள் எதையும் நமக்கு கொடுப்பதில்லை. ஆனால் அவைகள் புதிய ஏற்பாட்டிலுள்ள இந்த தகவல்களை உறுதிப்படுத்த மிகவும் பெரிய முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஏனெனில் இது கிறிஸ்தவத்திற்கு அனுகூலமாக, பாரபட்சமாக நடக்கக்கூடியவைகள் என குற்றப்படுத்தப்பட்ட மூலங்களிலிருந்து வருவதில்லை.

---

குறிப்புகள்

[1]Tacitus *Annals* 15.44.2-8. [2]Suetonius *Claudius* 25.4. [3]Pliny *Letters* 10.96. [4]Lucian *The Passing of Peregrinus* 11. [5]Josephus *Antiquities* 20.9.1. [6]Ibid., 18.3.3. (Emphasis mine.) [7]Ibid., 18.5.2.